# முத்தரிப்புத்துறை தாயை வாழ்த்துவோம்

எங்கள் முத்தரிப்பு நாடு
முத்தேன் தமிழ் திரு நாடு
திருக்கன்னி ஆலய அருட்பணி வேலையை
சிரம் தாங்கும் திரு நாடு
இது தேன் தழிழ் திரு நாடு

எங்கள் அலைகடல் அருகினிலே
அல்லி அரசாண்ட அரண்மனை இருப்பது காண்
அல்லி அருட்சுணன் திருமணமும் - இங்கு
நடந்தது சரித்திர ஏட்டில் உண்டு
குயினன் கோட்டையும் கோபுரமும் - எங்கள்
ஊருக்கு அழகை கொடுத்ததம்மா- எங்கள்
மனதினில் மகிழ்வைத்தருவதம்மா

ஈரினம் என்பார் பேச்சினிலே - இங்கு
ஓரினம் என்போமெம் மூச்சினிலே
அன்பே நெஞ்சினில் அகங்கொள்ளும் - என்றும்
வஞ்சமே கொள்ளாதெம் நெஞ்சகமே
ஆயிரம் இன்னல்கள் நேர்ந்தாலும் - அதை
ஆராய்ந்து தீர்ப்பது தீரர்களே – எங்கள்
முத்தரிப்புத்துறை முதியோர்களே

நீலத் திரை கடல் ஆழியிலே - சென்று
ஜெகம் புகழ் முத்தெடுத்தகமகிழ்வோம்
முத்தத்தில் தவழும் குழந்தைகள் வாயிலும்
முத்துச் சிற்பிகள் இருக்குதம்மா – அதை
தாய்மார் அகற்றி மார்போடணைத்து
வாய்முத்தம் கொடுப்பது வழக்கமம்மா – எங்கள்
முத்தரிப்புத்தாய் முத்தமம்மா

மாந்தை முசலி மாதோட்டம் - எல்லாம்
செழிப்புறச் செய்யுமெம் அருவிநதி
வயல் நிலம் நிரப்பி கயலினம் திரட்டி
கழிமுகம் கொள்ளுதல் எங்கள் துறை
ஆணினம் சென்று மீனினம் பிடிக்க
அரும் துணை புரிவதும் எங்கள் நதி
பெருந் துணை புரிவதும் எங்கள் நதி

சிற்றிடை கலத்தில் நீர் தத்தழிக்க – எங்கள்
கன்னியர் புன்னகை சிரிப்பொலிக்க
ஆடிடும் அரம்பையர் போல் நடந்து - இங்கு
அழகுற வருவோர் மெய் மறந்து
சிற்றிளம் சிங்கங்கள் பொதுச்சேவை புரிந்து

பொலிவுற வாழ்ந்திடும் எம்நாடு
புகள் பெற்று ஓங்கிய பூ நாடு

ஆக்கம்:- முத்துச்சிப்பியன்